بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 26/07/2024 அன்று U.K ஆல்டனில் உள்ள ஹதீக்கத்துல் மஹ்தியில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஆண்டு மாநாட்டின் பணியாளர்கள் மற்றும் விருந்தினர்களுக்குப் பொன்னான அறிவுரைகள்

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَاِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَلَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அல்லாஹ்வின் அருளால் இன்று பிரிட்டன் ஆண்டு மாநாடு துவங்குகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு மார்க்க மற்றும் ஆன்மிக சூழலிலிருந்து பயன் பெறுவதற்காக வந்துள்ளார்கள். இந்த சூழலில் தங்கி நாம் உலக விஷயங்களில் இருந்து விலகியிருந்தவாறு, தத்தமது ஆன்மிக மற்றும் நல்லொழுக்க நிலைகளை மேம்படுத்துவற்கு முயற்சி செய்வதற்காக, இந்த நாள்களில் இங்கு, ஹதீக்கத்துல் மஹ்தியில், ஒரு தற்காலிக நகரம் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, இத்தகைய சூழ்நிலையில், வரக்கூடியவர்களுக்கு எவ்வகையான வசதியும் கிடைப்பதைவிட, எவ்வாறு நாம் இந்த சூழலிலிருந்து அதிகதிகமாகப் பயன் பெறலாம் என்ற கவலை அதிகம் இருக்க வேண்டும்.

ஆனால், எவ்வாறு இருப்பினும், மனிதத் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் மனிதனுடன் இணைந்துள்ளன. எனவே, நிர்வாகம் வரக்கூடியவர்களுக்கு இயன்றவரை எல்லா வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இந்த நோக்கத்திற்காகப் பல்வேறு துறைகள் ஆண்டுமாநாட்டின் போது நிறுவப்படுகின்றன. ஆயிரக்கணக்கான பணியாளர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்குத் தொண்டு செய்வதற்காகத் தன்னார்வலர்களாகத் தமது தொண்டுகளை முன் வைக்கிறார்கள்.

இது தொடர்பாக முதலிலோ நான் எல்லாப் பணியாளர்களுக்கும் சில விஷயங்கள் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன். நீங்கள் உங்களுடைய பணிகளை செவ்வனே நிறைவேற்றிட முயற்சி செய்ய வேண்டும். ஆண்டுமாநாட்டின் விருந்தினர்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் விருந்தினர்கள் எனப் புரிந்து தொண்டாற்றுங்கள்.

உங்களது பார்வையில், விருந்தினர் தரப்பிலிருந்து ஏதாவது வரம்பு மீறுதல் நிகழ்ந்தாலுமே அதைக் கண்டும் காணாமல் விட்டு விடுங்கள். அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு நாட்டிலும் விருந்தோம்பல் மற்றும் உயர் நல்லொழுக்கங்களை வெளிப்படுத்துதல் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒரு சிறப்பான பண்பாக ஆகி விட்டது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: விருந்தினரின் உள்ளமோ கண்ணாடியைப் போன்றது. அவர்கள் உணர்ச்சிவசப்படுவார்கள். அவர்களை கவனித்துக் கொள்ள வேண்டும். இங்கு வரக்கூடிய பெரும்பாலான அஹ்மதிகளோ, 'இன்னல்களையும் வசதியின்மையையும் பொறுத்துக் கொள்ள வேண்டி வரும்' என்ற விஷயத்தை நன்றாகப் புரிந்து (இங்கு) வருகிறார்கள். சில விருந்தினர்கள் இப்பொழுது ஜமாஅத்தில் இணைந்திராதவர்கள் ஆவார்கள். அவர்களை எந்நிலையிலும் சிறப்பாக கவனித்துக் கொள்ள வேண்டி வருகிறது.

எல்லாத் துறைகளும், அது டிராஃபிக் ஆகட்டும், பார்க்கிங் டியூட்டி ஆகட்டும், உணவு பறிமாறுபவர்கள் ஆகட்டும் அல்லது ஒழுங்குப்படுத்துதல் ஆகட்டும், பாதுகாப்புப் பணி, தூய்மை, தண்ணீர் விநியோகம் என எந்தத் துறையின் பணியாகட்டும்! இயன்ற அளவு விருந்தினரின் வசதிக்கான ஏற்பாடு இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அவருக்கு எவ்வகையிலும் துன்பம் ஏற்படக் கூடாது.

விருந்தினர்களுக்கு நான் கூறவிரும்புவது என்னவென்றால், நீங்கள் அனைவரும் ஒரு நல்ல நோக்கத்திற்காக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களாக ஆகி வந்துள்ளீர்கள். உலக கண்ணியம் மற்றும் உலகத் தொண்டுக்கு பதிலாக, ஓர் உண்மையான முஸ்லிமின் தனிச்சிறப்பான உயர் நல்லொழுக்கங்களில், மேற்கொண்டு முன்னேற்றம் காண்பதை கருத்தில் கொள்ளுங்கள்.

இறைவனுக்காகப் பயணம் மேற்கொள்பவர்களுக்கு உலக வசதிகளின் பக்கம் மிகக் குறைவாகவே கவனம் இருக்கும். சிலவேளை ஏற்பாட்டில் பலவீனங்கள் தென்படுகின்றன. ஆனால், அவற்றைக் கண்டும் காணாமல் விட்டு விடுங்கள். வரக்கூடிய ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளத்திலும், நமது நோக்கம் ஆன்மிக உணவுத்தட்டைப் பெறுவதாகும் என்ற சிந்தனை இருந்தால், விருந்தோம்பல் செய்பவர் மற்றும் விருந்தினர் ஆகிய இருவரும் அன்பு நேசத்தில் இந்த நாள்களைக் கழிப்பார்கள். வரக்கூடிய எல்லா விருந்தினர்களுடனும் ஒன்றுபோல் நடந்து கொள்ள வேண்டும் என்பதே நிர்வாகத்தின் முயற்சியாக இருக்கிறது. ஆனால், பிறகும் சிலவேளை நிறை குறை ஏற்பட்டு

விடுகிறது. ஆக, இதை விருந்தினர்கள் கண்டும் காணாமல் விட்டு விட வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விருந்தினர்களுக்கு மிகவும் கண்ணியமும் மரியாதையும் அளித்து வந்தார்கள். ஆனால், விருந்தினர்களுக்கு, 'உங்கள் தேவைகளைத் தயக்கமின்றி கூறி வாருங்கள்' என்றும் கூறுவார்கள்.

ஆனால், இது பொதுவான நிலைமைகளின் போதுள்ள விஷயம் ஆகும். ஜல்ஸாவின் விருந்தினர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: ஒரே ஏற்பாடு இருக்க வேண்டும். எல்லா விருந்தினர்க்கும் ஓர் ஏற்பாட்டின் கீழ் விருந்தோம்பல் செய்ய வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் விருந்தினர்களின் உள்ளத்தில் இந்த விஷயத்தைப் பதிய வைத்து வந்தார்கள்: நீங்கள் இங்கு வருவதற்கான அசல் நோக்கம் மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதும், உங்களுடைய உள்ளத்தையும் சிந்தனையையும் தூய்மையாக்குவதும், அல்லாஹ்வின் நெருக்கத்திற்கான படித்தரங்களைக் கடப்பதற்கு முயற்சி செய்வதுமாகும். ஆக, இந்த நோக்கத்திற்காகவே தாங்கள் அனைவரும் ஒவ்வோர் ஆண்டும் இங்கு ஒன்று கூடுகிறீர்கள். மாநாட்டுத் திடலில் அமர்ந்து மாநாட்டின் நிகழ்ச்சிகள் மற்றும் சொற்பொழிவுகளை கவனமாகக் கேளுங்கள். அதிலிருந்து பயன் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் தனதருளால் எந்த ஜமாஅத்தை வழங்கினான் என்றால், அது நாடுகள், சமுதாயங்களின் எல்லைகளையும் பிரிவுகளையும் முடிவுக்குக் கொண்டு வந்து விட்டது. ஒரு மகத்துவமிக்க சகோதரத்துவத்திற்கான அடித்தளமிடப்பட்டு விட்டது.

ஹுஸூர் (அலை) அவர்கள் ஜல்ஸாவின் ஒரு நோக்கமாக, 'ஜமாஅத்தின் சகோதரத்துவ தொடர்புகள் வலுப்பெற வேண்டும்' என்பதையும் கூறியுள்ளார்கள். அதற்காக ஒருவர் மற்றவருடன் சந்திப்பும் நிகழ்கிறது என்பது வெளிப்படையான விஷயம். ஆனால், நம்பிக்கை கொண்டவர் தனது நேரத்தை சரியாகப் பயன்படுத்துவது மிகவும் அவசியமாகும். எனவே, ஜல்ஸாவின் முழு நாளின் நிகழ்ச்சிக்குப் பிறகு கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில், அனைவரும் ஒன்றாக அமருங்கள்; உரையாடுங்கள் மற்றும் தொடர்புகளை அதிகரித்துக் கொள்ளுங்கள். ஆனால், அதில் நேரம் வீணாகும் அளவு மூழ்கி விடாதீர்கள்.

இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மக்கள் ஒன்று கூடும் போது, சிலவேளை விரும்பத்தகாத சூழல் உருவாகி விடுகிறது. நினைவில் கொள்ளுங்கள்! உண்மையான நம்பிக்கை கொண்டவர்கள் கோபத்தை அமுக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். எனவே, ஜல்ஸாவின் சூழலின் புனிதத்தை முன் நிறுத்துங்கள். ஒருவர் மற்றவரின் பிழைகளைக் கண்டும் காணாமல் விட்டு விடுங்கள். யாராவது ஒரு பணியாளர் ஏதாவது தவறிழைத்து விட்டாலுமே, தவறாக எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக பரந்த மனப்பான்மையைக் காட்ட வேண்டும். பொறுமைகாத்தும், மன்னித்தும் செயல்பட வேண்டும். பரந்த மனப்பான்மை உருவாகி விட்டது என்றால், எல்லா சண்டைகளும் விரும்பத்தகாத சூழலும் முடிவுக்கு வந்து விடும். எனவே, விருந்தினர்கள் மற்றும் ட்யூட்டி கொடுப்பவர்கள் ஆகிய இருவருக்கும் கூறுகிறேன், பரந்த மனப்பான்மையை வெளிப்படுத்துவது உங்களுடைய கடமையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆசைக்கேற்ப ஒருவர் மற்றவருடன் அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் முன்னுதாரணம் ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதைத்தான் அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்கள் தொடர்பாகக் கூறியுள்ளான். எனவே, சின்னச் சின்ன விஷயங்களில் உழன்று கொண்டிருப்பதற்கு பதிலாக நமது வாழ்வின் நோக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று முயற்சிக்கக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும்! அது ருகூவு, சஜ்தாக்கள் மற்றும் இபாதத்துகள் மூலமாக கிடைக்கிறது. இறைவனை நினைவுகூர்வதன் மூலம் கிடைக்கிறது. இங்கு வந்துள்ள ஒவ்வொரு விருந்தினரும் தனது பயணத்தை அல்லாஹ்வுக்காக மட்டுமே ஆக்குவற்கு முயற்சி செய்ய வேண்டும்.

பணியாளர்கள் மற்றும் விருந்தினர்களென அனைவரும் நினைவில் கொள்ளுங்கள்! ஜமாஅத் அல்லாத மற்றும் முஸ்லிம் அல்லாத மக்களும் இங்கு வந்திருப்பார்கள். நீங்கள் உயர்வான நல்லொழுக்ககத்தை வெளிப்படுத்திக் கொண்டிருப்பீர்களாயின், இது மௌனமான தப்லீக் ஆக அமையும். அதற்கு அந்நியர்கள் மீது நல்ல தாக்கம் ஏற்படுகிறது. அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் கவனம் பிறக்கிறது. அவர்கள் இஸ்லாமிய போதனைகளின் சிறப்புகளால் தாக்கமடைகிறார்கள்.

ஒரு அவசியமான விஷயமாவது, இங்கு வரக்கூடியவர்கள் ஒருவர் மற்றவருக்கு சலாம் கூறுவதையும் வழக்கப்படுத்துங்கள். இதன் பக்கம் அதிகதிகமாக முயற்சி செய்யுங்கள். மிகவும் பரக்கத்துக்குரியதும் தூய்மையானதுமான துஆ நமக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. விருந்தோம்பல் செய்பவரும் விருந்தினரும் ஒருவர் மற்றவருக்கு சலாம்

கூறும் போது, அவர்கள் ஒவ்வொரு வகையான அச்சம் மற்றும் கவலையை விட்டும் விடுபடக்கூடிய அதே வேளையில் இந்த துஆ ஒருவர் மற்றவருக்கு அருள்பாலிப்பதாக இருக்கிறது.

எனவே, இந்த நாள்களில் இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். அப்போதுதான் நாம் ஒவ்வொரு பக்கமும் சமாதானம், அன்பு மற்றும் நேசத்தைப் பரப்பக்கூடியவர்களாக ஆக முடியும். மேலும், இந்த சூழல் அல்லாஹ்வுக்காக மட்டுமே அன்பு, சகோதரத்துவம் செலுத்துவதற்கான சூழலாக ஆகி விடும். எல்லா விதமான நோக்கங்களை விட்டும் நம்மைத் தூய்மை படுத்திக் கொள்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். இந்த நாள்களில் உங்களது வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவற்கு முயற்சி செய்யுங்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சலாம் கூறுவதை வழக்கப்படுத்துங்கள். அதற்காக நீங்கள் ஒருவரை அறிந்திருந்தாலும் சரி, அறிந்திருக்காவிட்டாலும் சரி அவருக்கு சலாம் கூறுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு சம்பவத்தை உங்களுக்குக் கூறுகிறேன். முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஜங்கே முகத்தஸ் எனும் ஒரு விவாத நிகழ்ச்சி இருந்தது. எந்த இடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தங்கியிருந்தார்களோ, அங்கு விருந்தினர்கள் அதிகமாக இருந்ததன் காரணமாக நிர்வாகத்தினர் அன்னாருக்கு உணவு எடுத்து வைக்க மறந்து விட்டார்கள். இரவின் ஒரு பகுதி கழிந்து விட்டது. பெரும் காத்திருப்புக்குப் பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள் உணவைப் பற்றி வினவிய போது, நிர்வாகத்தினர் அனைவரும், 'வெகுநேரம் ஆகிவிட்டதே! உணவு எடுத்து வைக்கப்படவில்லையே! கடைவீதியும் மூடப்பட்டுள்ளதே!' என்று பெரும் கவலைக்குள்ளானார்கள்.

இந்த சூழ்நிலை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குத் தெரிய போது அன்னார் கூறினார்கள்: 'இப்படி பதற்றமும் கவலையும் அடைய வேண்டிய தேவை என்ன இருக்கிறது? உணவு விரிப்பில் பாருங்கள். அதில் மீதமிருக்கும் உணவையே எடுத்து வாருங்கள்.' அங்கு பார்க்கப்பட்ட போது, சில ரொட்டித் துண்டுகளைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை. குழம்பு எதுவும் இருக்கவில்லை. ஹுஸூர் (அலை) அவர்கள், 'எமக்கு இதுவே போதுமானது' என்று கூறி அதையே உண்டு விட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் எல்லாரையும் விடப் பெரிய நேசர் மற்றும் ஹுஸூர் (ஸல்) அவர்களின் சுன்னத் படி அமல் செய்யக்கூடிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின்

முன்மாதிரி இதுவாக இருந்தது. ஆக, ஹுஸூர் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்துள்ளதாக வாதம் புரியக்கூடிய நாமும் இந்தப் பொறுமை, பரந்த மனப்பான்மை, நன்றியுடைமை மற்றும் நல்லுணர்வுகளை எப்பொழுதும் வெளிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

நான் இந்த விஷயத்தின் பக்கமும் கவனமூட்ட விரும்புகிறேன். இந்த நாள்களில் பல்வேறு வகையான கண்காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் ஐரோப்பிய சுற்றுப்பயணத்திற்கு இவ்வாண்டு நூறாண்டுகள் நிறைவடைகின்றன. எனவே, யூகே ஜமாஅத் தலைமையக காப்பகத்துடன் இணைந்து பல்வேறு படங்களைக் கொண்ட ஒரு கண்காட்சி அமைத்துள்ளது. அதைக் கண்டிப்பாகப் பாருங்கள். இதே போன்று பார்க்க வேண்டிய இதர கண்காட்சிகளும் உள்ளன. பணிகள் இல்லாத நேரத்தில் நேரத்தை வீணடிப்பதற்கு பதிலாக இந்தக் கண்காட்சிகளைப் பார்ப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

இந்த நாள்களில் பாதுகாப்பின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்துங்கள். நமது மிகப் பெரிய பாதுகாப்புப் பணி, உங்களுடைய வலமும் இடமும் பார்வை வைத்திருப்பதாகும். ஆனால், நம்மிடமிருக்கும் மிகப் பெரிய ஆயுதம் அல்லாஹ்வின் அடைக்கலம் ஆகும். அந்த அடைக்கலத்தைப் பெறுவதற்காகக் குறிப்பாக இந்த மூன்று நாள்களில் துஆக்கள் மற்றும் திக்ரே இலாஹியின் பக்கம் அழுத்தம் கொடுக்க வேண்டும். அல்லாஹ் எல்லாருக்கும் இதன்படி அமல் செய்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! இந்த ஜல்ஸா எல்லா வகையிலும் அருளுக்குரியதாக அமையட்டுமாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا
مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ
اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ
تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)